புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com





ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • டிசம்பர் 07, 2023 • புரட்சி 23 • முழக்கம் 47 • விலை ரூ.3.00


# புலியூரில் ‘மாவீரர் நாள்’



சேலம் : கொளத்தூர் ஈழ ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்பு குழுவின் சார்பில் “மாவீரர் நாள்” நிகழ்ச்சி 27.11.2023 திங்கள் மாலை 5.30 மணியளவில் சேலம் மாவட்டம் கொளத்தூர் புலியூர் பிரிவில் அமைந்துள்ள பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்விற்கு தார்க்காடு செ. தர்மலிங்கம் தலைமை தாங்கினார். புலியூரைச் சேர்ந்த தோழர்கள் சரவணன், வாசு, சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொளத்தூர் திவிக நகரச் செயலாளர் அறிவுச்செல்வன் வரவேற்புரையாற்றினர்.

மாலை 6.05 மணிக்கு தமிழீழ விடுதலைக்காக போர்க்களத்தில் வீரச் சாவடைந்த விடுதலைப் புலி மாவீரர்கள் - பொதுமக்களின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் “மாவீரர் பாடல்” ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மாவீரர் பாடல் ஒளிபரப்பிற்கு பிறகு “மாவீரர் உரை” நிகழ்த்தும் பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக வெளியீட்டுச் செயலாளர் கோபி இராம இளங்கோவன், மூத்த வழக்கறிஞர் இரத்தினம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி “மாவீரர் நாள்” உரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை கொளத்தூர் நகரச் செயலாளர் ராமமூர்த்தி தொகுத்து வழங்கினார். இலக்கம்பட்டி ரா. சக்திகுமார் நன்றி கூறினார்.

இந்த வீரவணக்க நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஈழ ஆதரவாளர்கள், பொதுமக்கள் பெண்கள், குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோர் மறைந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தினார்கள்.

## மதுரையில் மாவீரர் நாள்

மதுரை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு ராமசுப்பு மண்டபத்தில் நடைபெற்றது. மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டி முன்னிலை வகித்தார். மாவட்ட கழக காப்பாளர் தளபதி தொடக்க உரையாற்றி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



கழக பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் கலந்து கொண்டு மாவீரர் நாள் உரையாற்றினார்.

தமிழ்த்தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன், அதிமுக பொதுச் செயலாளர் பசும்பொன் பாண்டியன், விடுதலை சிறுத்தைகள் துணை பொதுச் செயலாளர் வெ.கனியமுதன், மதிமுக மகபூப்ஜான், ஆதித்தமிழர் விடுதலைக் கட்சி விடுதலை வீரன், தமிழக மக்கள் வாழ்வுரிமைக் கட்சி தலைவர் மணிபாபா, தமிழ்தேசக் குடியரசு இயக்கம் மெய்யப்பன், தமிழ்ப்புலிகள் கட்சி தென்மண்டல செயலாளர் சிதம்பரம், மக்கள் சட்ட உரிமை இயக்கம் அண்ணாத்துரை, முருகேசன், வேங்கைமாறன், கண்ணன் காமாட்சி, விஜய் உள்ளிட்ட கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத்தினர் பங்கேற்றனர்.

# அம்பேத்கர் மணி மண்டபத்தில் – கழகம் வீரவணக்கம்



சென்னை : புரட்சியாளர் அம்பேத்கரின் 67வது நினைவுநாளை முன்னிட்டு சென்னை அம்பேத்கர் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மாலை சென்னை மாவட்டக் கழகம் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்டத் துணைத் தலைவர் சுகுமார், இராஜேசு, அசோக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மயிலாப்பூர் : புரட்சியாளர் அம்பேத்கரின் 67வது நினைவு நாளை ஒட்டி மயிலைப் பகுதிக் கழகம் சார்பில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மயிலைப் பகுதித் தலைவர் இராவணன், அய்யா உணவகம் சுரேஷ், பிரவீன், உதயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சேத்துப்பட்டில் ராஜேந்திரன் தலைமையில் கழகத் தோழர்கள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சேலம்மேற்கு:புரட்சியாளர் அம்பேத்கர் 67வது நினைவுநாளை ஒட்டி 06.12.23 காலை 10 மணியளவில் சேலம் மேற்கு மாவட்ட கழக சார்பில் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு தலைமையில், தலைமைக்குழு உறுப்பினர்கள் காவை. ஈசுவரன், அ.சக்திவேல் முன்னிலையில் அச்சங்காட்டில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

அதனைத் தொடர்ந்து எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை. ஈசுவரன் தலைமை தாங்கினார். கழக மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, தலைமைக்குழு உறுப்பினர் அ.சக்திவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கொளத்தூர் கழக ஒன்றியப் பொறுப்பாளர் ஒ.சுதா நன்றியுரை யாற்றினார். இந்நிகழ்வில் மேட்டூர், மேட்டூர் RS, காவலாண்டியூர், கொளத்தூர் பகுதி தோழர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

06.12.23 காலை 11.30 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழக மேட்டூர் நகர கழக சார்பில் மூலக்காடு பகுதியில் எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் சேலம் மேற்கு மாவட்டப் பொருளாளர் சம்பத்குமார் தலைமையில் நடைபெற்றது. நகரச் செயலாளர் குமரப்பா வரவேற்புரை வழங்கினார். அண்ணாதுரை, குமரப்பா, சி.கோவிந்தராசு குழுவின் பகுத்தறிவுப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

அதனைத் தொடர்ந்து தலைமைக்குழு உறுப்பினர்கள் காவை. ஈசுவரன், அ.சக்திவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அம்ஜத்கான் நன்றியுரை கூறினார்.

கோவையில் புரட்சியாளர் அம்பேத்கரின் 67வது நினைவு நாளை முன்னிட்டு கோவை மாவட்டக் கழகம் சார்பில் மாநகரச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் காந்திபுரம் பெரியார் படிப்பகம் முன் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் பீளமேடு பகுதியில் ராஜாமணி தலைமையில் அம்பேத்கர் நினைவுநாள் கூட்டம் நடைபெற்றது.

மதுரையில் புரட்சியாளர் நினைவு நாளையொட்டி தல்லாகுளத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கரின் சிலைக்கு மதுரை கழக சார்பில் முருகேசன் தலைமையில் மாலையணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

தேனியில் பெரியகுளத்தில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தோழர்கள் தேனி ராயன், சந்திரன், நாகேந்திரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் தேனி தமிழரசி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## தலையங்கம்

# தூய்மைப் பணியாளர்களின் அவலம்

2015ம் ஆண்டு வெள்ளத்துக்குப் பிறகு சென்னை மீண்டும் ஒரு வெள்ள அபாயத்தை சந்தித்து அதிலிருந்து மீண்டுவந்திருக்கிறது. 2015ம் ஆண்டில் வந்தது செயற்கை வெள்ளம், இப்போது வந்திருப்பது இயற்கை வெள்ளம் என்று தமிழ்நாடு முதல்வர் கூறியிருக்கிறார். அதற்குக் காரணம் உண்டு. 2015ம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக இருந்த போது சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரியான செம்பரம்பாக்கம் ஏரி முன்னறிவிப்பின்றி திறந்துவிடப்பட்டதால் சென்னை வெள்ளத்தில் மூழ்கியது. இப்போது இயற்கயின் சீற்றம், 2015ல் பெய்த மழையின் அளவை விட இரு மடங்கு அதிகமாக மழையை சென்னை சந்தித்துள்ளது.

அப்போது சராசரியாக 25செ.மீ அளவு, இப்போது 47 செ.மீ அளவு. நான்காண்டு காலம் முதல்வராக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி திமுக ஆட்சியின் மீது குற்றம் சுமத்தி பேரிடரிலும் அரசியல் நடத்த விரும்புவது தான் வேதனைக்குரியது. சென்னையில் ரூ.3000 கோடி செலவில் மழைநீர் தேங்காமல் வடிகால் பணிகளை திமுக ஆட்சி மேற்கொண்டும் ஏன் வெள்ளம் சூழ்ந்திருக்கிறது என்று கேட்கிறார். அந்தப் பணிகள் நடைபெற்ற காரணத்தால் தான் சென்னை பெரும் ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறது என்று முதல்வர் சரியாக பதில் கூறியுள்ளார்.

வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில் மின்சாரக் கம்பிகள் அறுந்துவிழுந்து உயிர்ப் பலிகள் நடப்பது கடந்தகால கசப்பான வரலாறு. அத்தகைய உயிரிழப்புகள் ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதால் தான். மின் இணைப்புகள் தற்காலிகமாக துண்டிக்கப்பட்டு, வெள்ளம் வடிந்த பகுதிகளில் மீண்டும் இணைப்பை தந்துவருகிறார்கள். ஆனால் எடப்பாடி பழனிச்சாமி கூறும் காரணம் தான் விசித்திரமாக உள்ளது. வெள்ளம் சூழ்ந்து நிற்பதை மக்கள் பார்த்துவிடக் கூடாது என்பதால் தான் மின் இணைப்பைத் திட்டமிட்டு துண்டித்திருக்கிறார்கள் என்கிறார். வெள்ளம் சூழ்ந்து இருப்பதை மின்சார விளக்குகள் இல்லாமல் பகலிலேயே மக்கள் பார்க்க முடியாதா? கடந்தகால ஆட்சிகளில் இப்படி வெள்ளம் வந்த போது மின்சாரம் துண்டிக்கப்பட்டதே இல்லையா?

2015ல் ஜெயலலிதா ஆட்சியில் முன்னறிவிப்பின்றி திறந்துவிடப்பட்ட ஒரு இலட்சம் கன அடி தண்ணீரால் சென்னையில் 193 பேர் பலியானார்கள். ஒரு மாத அளவுக்கு சென்னை மாநகரம் மின் இணைப்பின்றி இருளில் தவித்ததை மக்கள் மறந்துவிடவில்லை.

புயல் எச்சரிக்கை வந்தவுடனேயே தமிழக முதல்வர் அதிகாரிகள் கூட்டத்தை கூட்டினார். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கும் மக்களுக்கு தங்குமிடம், உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன, அய்.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு களமிறக்கப்பட்டனர். 36 மணிநேரம் இடைவிடாது மழை கொட்டும் போது நீர் உடனே வடிந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. தேங்கிய நீரை எந்திரங்களைக் கொண்டு அகற்றும் பணிகள் தீவிரமாக நடப்பதை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். முழு ஆற்றலையும் அரசு பயன்படுத்தி மக்களை பாதுகாத்து வருகிறது என்பதே உண்மை.

இது தொடர்பாக மற்றொரு கருத்தையும் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும், பேரிடர், வெள்ளம், புயல் சூழ்ந்த காலங்களில் களத்தில் இறங்கி உயிரைப் பணயம் வைத்து மக்களை காப்பாற்றுவது யார்? பேரிடர் மேலாண்மை பாதுகாப்புக் குழுவினரும் துப்புரவுப் பணியாளர்களும் தான். இப்போது வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்து 5000 துப்பரவுப் பணியாளர்கள் கூடுதலாக வரவழைப்பட்டுள்ளனர். இவர்கள் தான் தங்கள் உடல்நலனுக்கு கேடு விளைவிக்கும் சூழலைத் தாங்கிக் கொண்டு உபாதைகளை ஏற்று இந்தப் பணிகளை செய்தாக வேண்டும். இவர்கள் எல்லாம் 'பிரம்மாவின்' நெற்றியில் பிறந்தவர்கள் அல்ல, சாதி இழிவையும், தீண்டாமைக் கொடுமைகளையும் சுமந்து நிற்பவர்கள்.

மழை இல்லவிட்டால் யாகம் நடத்த வேண்டும் என்று கூறும் வேத புரோகிதர்கள் கூட்டம் பெருமழை வெள்ளம், புயல்களை நிறுத்துவதற்கு யாகங்கள் எதையும் நடத்துவதில்லை. யாக மோசடிகள் அம்பலமாகிவிடுமே! இவர்கள்தான் ஜாதியையும், வர்ணாசிரமத்தையும் காப்பாற்றும் இந்துதர்மத்தின் பெருமைகளை பேசுகிறார்கள். சனாதன தர்மமே உயர்வானது என்கிறார்கள். இவர்கள் பேசும் சனாதன தர்மத்தில் பேரிடர் காலங்களில் மக்களை காப்பாற்றவும், ஊரை தூய்மைப்படுத்தவும் ஒடுக்கப்பட்ட ஜாதியினர் தான் இப்போதும் தேவைப்படுகிறார்கள்.

2015 வெள்ளத்தில் இப்படி வெளிமாவட்டங்களில் இருந்து சென்னை நகரத்தை சுத்தப்படுத்த அழைக்கப்பப்பட்ட பணியாளர்களுக்கு கையுறை போன்ற பாதுகாப்பு சாதனங்களைக் கூட அன்றைய அட்சி வழங்க முன்வரவில்லை. இப்போதும் அத்தகைய துயரங்கள் ஏதும் நிகழ்ந்துவிடாது ஆட்சியாளர்கள் இவர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஊதியங்களை தாராளமாக வழங்க வேண்டும்.

துப்புரவுப் பணிகளில் அனைத்து வர்ணத்தவர்களுக்கும் பங்கு உண்டு என்ற நிலையை நோக்கி அரசின் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். கோவில் கர்ப்பகிரக உரிமை தங்களுக்கு மட்டுமே என்று சொந்தம் கொண்டாடுகிறது ஒரு கூட்டம், ஆனால் துப்புரவு பணி உங்கள் சமூகத்துக்கு மட்டுமே என்று திணிக்கிறது இந்த சமூகம், இரண்டுமே சனாதனம் தான். வெள்ள நிவாரணம் பற்றி பேசும் போது அதில் அடங்கியுள்ள சமுதாய அவலங்களையும் சேர்த்தே சிந்திக்க வேண்டும்.

# சென்னை வெள்ளம் : கழகத் தோழர்கள் உணவு வழங்கினர்

*திருவல்லிக்கேணி பகுதிக் கழக சார்பில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மயிலாப்பூர் கணேசபுரம், ரூதர்புரம், சைவ முத்தையா தெரு, செல்லம்மாள் தோட்டம் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கப் பட்டது.*

*திருவல்லிக்கேணி பகுதிக் கழகத் தோழர்கள் இதற்கான பணிகளை காலை முதலே தொடங்கி இரவு வரை செய்தனர்.*

*கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் ரூ.5000, கவிப்பிரியா ரூ.2000, பாலாஜி ரூ.500, திண்டுக்கல் மாக்சிம் கார்கி ரூ.600 வழங்கினார்கள்.*

*மயிலைப் பகுதிக் கழக சார்பில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சத்தியவாணி முத்து நகர், சுப்புராயன் சாலை, விசாலாட்சி தோட்டம், கணேசபுரம், முண்டக்கன்னியம்மன் கோவில் அருகிலுள்ள ஆகிய பகுதியில் உணவு வழங்கப்பட்டது.*

*மயிலைப் பகுதித் தலைவர் இராவணன், பிரவின், பார்த்திபன், சிவா, கார்த்திக், பாஸ்கர், வினோத், மனோகர், சுகுமார், சபரி, சுரேஷ், மாரிமுத்து, மணிகண்டன் இப்பணிகளை மேற்கொண்டனர்.*





## 4 மாநில தேர்தல் மொத்த வாக்குகள் விபரம்

மத்திய பிரதேசம் : காங்கிரஸ் - 1,75,64,353
பாஜக - 2,11,13,278

ராஜஸ்தான் : காங்கிரஸ் - 1,56,66,731
பாஜக - 1,65,23,568

தெலுங்கானா : காங்கிரஸ் - 92,35,792
பாஜக - 32,57,511

சத்தீஸ்கர் : காங்கிரஸ் - 66,02,586
பாஜக - 72,34,968

### வாக்கு சதவீதம்

சத்தீஸ்கர் : காங்கிரஸ் 42.23%
பாஜக 46.27%

மத்திய பிரதேசம் : காங்கிரஸ் 40.40%
பாஜக 48.55%

ராஜஸ்தான் : காங்கிரஸ் 39.53%
பாஜக 41.69%

தெலுங்கானா : காங்கிரஸ் 39.40%
பாஜக 13.90%.

காங்கிரஸ் - 4.91 கோடி வாக்குகள்.
பாஜக - 4.8 கோடி வாக்குகள்.
நாடு காங்கிரசை விரும்புகிறது என்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகிறது

# மோடி ஆட்சி இஸ்ரேலை ஆதரிப்பது ஏன் (5)

# இந்தியாவில் பார்ப்பனர்கள், அமெரிக்காவில் யூதர்கள்

**விடுதலை இராசேந்திரன்**

1968-ம் ஆண்டு அமெரிக்கத் தேர்தலில் போட்டியிட்ட நிக்சன், ஹம்ப்ரி இருவருமே யூதர்களின் ஆதரவுக்கு வலைவீசினார்கள். தேர்தல் செலவுக்குப் பெருந்தொகையை யூதர்களிடமிருந்து பெறுவதே இதன் நோக்கம். ஹம்ப்ரிக்குத்தான் யூதர்கள் ஆதரவு கிடைத்தது. 85 சதவீத யூதர்களின் வாக்கு ஹம்ப்ரிக்குக் கிடைத்தும், அவரால் வெற்றி பெற முடியவில்லை! நிக்சன் வெற்றி பெற்றுவிட்டார். அரபு - இஸ்ரேல் பிரச்சனைக்கு நியாயமான முறையில் அமைதித் தீர்வு ஒன்றை உருவாக்க விரும்பி, 1967-க்குப் பிறகு இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளை, அரபு நாடுகளிடம் திரும்ப ஒப்படைக்கும் முயற்சியில் இறங்கினார். யூதர்கள் நிக்சனை மிரட்டத் துவங்கினர். யூத அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரட்டி, வலிமையான போராட்டங்களில் இறங்கின. எதிர்ப்புகளைச் சமாளிக்க முடியாமல் நிக்சன் திணறினார். 1970 மார்ச்சில் - பிரான்ஸ் அதிபர் அமெரிக்கா வந்தபோது, அவரது அரபு ஆதரவுக் கொள்கைகளை எதிர்த்து யூத அமைப்புகள் போராட்டம் நடத்தின. அமெரிக்க - பிரான்ஸ் உறவு சீர்குலைந்து விடக்கூடாது என்பதற்காக, பிரான்ஸ் அதிபரிடம் நிக்சன் மன்னிப்புக் கோரினார். இதற்காக யூதப் பத்திரிகைகள், நிக்சனைக் கடுமையாகக் கண்டித்து எழுதின. இந்த நிலையில் இஸ்ரேலுக்குப் போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களை விற்க வேண்டும் என்று 71 செனட் உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அதிபருக்குக் கடிதம் எழுதினர். அமெரிக்க செனட்டும் இதை ஆதரித்தது. எல்லோரையும் சரிக்கட்டும் முயற்சிகளில் யூதர்கள் இறங்கினர் இறுதியில் நிக்சனும் பணிந்தார். அப்போது, அமெரிக்காவில் இஸ்ரேலின் தூதராக இருந்த இட்ஷாக் ராபின் என்ற யூதர், வாஷிங்டனிலிருந்து ஒலிபரப்பாகும் இஸ்ரேல் வானொலியில் இவ்வாறு பேசினார்:

'நிக்சனின் வெற்றிக்கு நான் ஆதரவாக இருந்தேன். எனவே, என்னுடைய இஸ்ரேல் நாட்டுக்கு உதவிகளைச் செய்ய வேண்டியது அவரது கடமை" என்று வெளிப்படையாகப் பேசினார். எந்த ஒரு நாட்டின் தூதரும் பேசக்கூடாத - மரபுகளை மீறிய முறைகேடான பேச்சு இது. எந்த நாடும் இதை அனுமதிக்காது. ஆனால், அமெரிக்கா அனுமதித்தது. அதன் பிறகு நிக்சன் - இஸ்ரேலின் செல்லப் பிள்ளையானார். வெள்ளை மாளிகையில் ஆட்சி செய்த அதிபர்களிலேயே மிகச் சிறந்தவர் நிக்சன்தான் என்று இஸ்ரேலியத் தூதர் புகழாரம் சூட்டினார். ரஷ்ய நாட்டுக்குப் பயணம் செய்த நிக்சன், ஒவ்வொரு ஆண்டும் 35,000 யூதர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ததோடு, சோவியத் யூதர்களின் இஸ்ரேல் குடியேற்றத்துக்கு 85 மில்லியன் டாலர் அமெரிக்க நிதி உதவி செய்யவும் முடிவெடுத்தார்.

1974-ல் வாட்டர் கேட் ஊழலில் சிக்கி நிக்சன் பதவி விலகியதைத் தொடர்ந்து, துணை அதிபராக இருந்த ஃபோர்டு அதிபரானார். அப்போது - அய்.நா. பொது மன்றத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராபத் பேச அழைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நியூயார்க்கில் 65,000 யூதர்கள் திரண்டு, அய்.நா. மன்றத்தை முற்றுகையிட்டனர். அராபத்தைக் கடுமையான வார்த்தைகளால் விமர்சிக்கும் சுவரொட்டிகளை ஒட்டினர். அராபத்தைக் கிரிமினல் - கொலைகாரன் என்று அந்தச் சுவரொட்டிகள் வர்ணித்தன. அராபத்தை அழைத்துப் பேசச் செய்ததற்காக, அய்.நா.வை அமெரிக்கா புறக்கணிக்க வேண்டும் என்று, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் - யூதர்களின் குரலை ஒலிக்கத் தொடங்கினர். அதன் பிறகு ஃபோர்டும் - அய்.நா.வைக் கண்டித்தார். அவரது ஆட்சியில், முக்கிய தலைமை அதிகாரிகளாக இருந்த ஹென்றி கிசிங்கர், ஆர்தர் பர்னஸ், ஜேம்ஸ்ஸ்கெல்கிங்கர், ஆலன் கிரீஸ்பென் ஆகிய அனைவருமே யூதர்கள்தான். நீதித்துறை, சுகாதாரம், கல்வி, தொழிலாளர் நலன், சமூக நலம் ஆகிய முக்கிய அரசுத்துறைகளின் தலைமை அதிகாரிகளாக இருப்பவர்கள் இப்போதும் யூதர்களே!

1976 நவம்பரில் நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட ஃபோர்டு, ஜிம்மி கார்ட்டர் ஆகிய இருவருமே, தேர்தல் நிதிக்காக யூதர்களை நாடினர். (அதிகாரபூர்வமாக செலவிடுவதற்கு அனுமதிக்கப்படும் தொகையை விட பல மடங்கு அங்கே செல விடப்படுகிறது). அட்லாண்டாவில் 100 யூதர்களை அழைத்துப் பேசினார் கார்ட்டர். இஸ்ரேலுக்குத் தனது ஆதரவைத் தருவதாக உறுதி கூறினார். வெற்றி பெற்ற கார்ட்டர் - தீவிர இஸ்ரேல் ஆதரவாளராகவே செயல்பட்டார்.

கார்ட்டர் நிர்வாகம்-இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயல்பட்டதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டலாம். தென்னாப்பிரிக்க அரசு, கருப்பின மாணவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, 48 அரபு மற்றும் கருப்பு ஆப்பிரிக்க நாடுகள் ஒரு கூட்டத்தைக் கூட்டின! இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா ஆகிய இரு நாடுகளைத் தவிர அய்.நா. உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன! இஸ்ரேல் நாட்டுக்கு அழைப்பு அனுப்பப்படாத இந்தக் கூட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று யூதர்கள் மிரட்டியதால், அமெரிக்கா, இந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தது. அமெரிக்காவின் இனவெறி எதிர்ப்பு கூட - இஸ்ரேலுக்கு அடிபணிந்ததுதான்.

உலகம் முழுவதும் வாழும் யூதர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 44 லட்சம். இதில் அமெரிக்காவில் வாழும் யூதர்கள் மட்டும் 61 லட்சத்து 55 ஆயிரம். இதில் நியூயார்க் நகரில் வாழ்வோர் மட்டும் 17 லட்சத்து 50 ஆயிரம்.

12 கோடியே 50 லட்சம் அரபு மக்கள் உலகம் முழுதும் வாழ்கிறார்கள் எண்ணிக்கையில் இஸ்ரேலியர்களை விடப் பன்மடங்கு அதிகம். அய்.நா.வில் அரபு நாடுகளுக்கு சுமார் 13 வாக்குகள் உண்டு. இருந்தும் கூட யூதர்கள் பக்கமே அமெரிக்கா உட்பட ஆதிக்க நாடுகள் நிற்பது ஏன்?

இந்தியாவின் பார்ப்பனர்களைப் போலவே யூதர்களும் - வலிமையான ஆதிக்க சக்திகள். இஸ்ரேலுக்கு எதிரான எந்த ஒரு சிறு நடவடிக்கையையும் அவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. உடனே கண்டனத்தைப் பதிவு செய்து விடுகிறார்கள். இந்தியப் பார்ப்பனர்களைப் போலவே, கண்டனத் தந்திகளையும் கடிதங்களையும் அனுப்பி விடுவார்கள். பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுவதை வழக்கமாகக் கொண்டவர்கள்.

பத்திரிகைகள் - யூதர்களின் குரலையே ஒலிக்கின்றன. உண்மைகளைத் திரித்தும், கற்பனைக் கதைகளை உருவாக்கியும் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டு, மக்கள் கருத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் யூதர்கள் வல்லவர்கள். யூதர்கள் மீது அனுதாபத்தை உருவாக்கும் செய்திகளைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்வதுதான் அமெரிக்க - அய்ரோப்பியத் தொலைக்காட்சிகள் - பத்திரிகைகளின் வழக்கம்.

அமெரிக்கப் பத்திரிகைகள், தகவல் தொடர்பு சாதனங்களில் - யூதர்களின் முதலீடு அதிகம். அதிகாரிகளையும், மக்கள் பிரதிநிதிகளையும், தங்களுக்கு ஆதரவாகச் செயல்பட வைப்பதற்கு, பணத்தை அள்ளி வீசவும், கருத்துருவாக்கம் செய்யவும் யூத அமைப்புகள் முழு நேரப் பிரதிநிதிகளை நியமித்து செயல்பட்டு வருகின்றன. மத்தியக் கிழக்கு நாடுகள் தொடர்பான அரசு மையங்கள் - யூதர்களின் ஆதிக்கத்திலே செயல்படுகின்றன. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் - மத்தியக் கிழக்குப் பிரச்சனை - இஸ்லாமிய நாடுகள் பிரச்சனை பற்றிய துறைகளையும் - யூதர்களே கைப்பற்றியுள்ளனர்.

அமெரிக்காவில் செல்வாக்குள்ள பத்திரிகை நியூயார்க் டைம்ஸ் இது, உலகம் முழுதும் 70 செய்தி ஏடுகளுக்கு செய்திகளைத் தரும் நிறுவனம். அந்நிறுவனம், யூதர்களின் ஊது குழலாகவே செயல்பட்டு வருகிறது. 'எங்களுடைய வலிமையான பணப்பெட்டியின் முன், இந்த தேசத்தைச் சரணடையவைப்போம்" என்று ஆணவத்தோடு எழுதியிருக்கிறார் யூத எழுத்தாளர் ஹெர்ஸ்ல்!

அமெரிக்க செல்வந்தர்களில் முன் வரிசையில் இருப்பவர்கள் யூதர்கள்தான். லிண்டன் பி. ஜான்சன் குழுமம், தொலைக்காட்சித் தொழிலில் முன்னணியில் இருக்கிறது. மற்றொரு செல்வந்தரான ஜான்சன், வாஷிங்டனிலும் அலபாமாவிலும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர். பேரி கோல்ட் வாட்டர் சகோதரர்கள் - பல்பொருள் அங்காடிகளை அரிசோனாவில் நடத்துகிறார்கள். உலகிலேயே பெரும் செல்வந்தராகத் திகழ்பவர் நெல்சன் ராக்பெல்லர். இவருக்கு உரிமையானதுதான் ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் - சட்டத்துக்குப் புறம்பாகச் செலவிடும் பெரும் தொகைக்கு யூதர்களையே எதிர்பார்த்திருப்பதால் - அவர்கள் அரசியலை ஆட்டிப் படைக்கிறார்கள்.

இந்தியாவில் பார்ப்பனர்கள் - ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்திருப்பது போல் அமெரிக்காவில் யூதர்கள் - செயல்படுகிறார்கள். இங்கே, பார்ப்பனர்களுக்கு பணபலம் பனியாக்கள்! அங்கே, யூதர்களே பணபலம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்! சியோனிசம் - பார்ப்பனியம் - இந்துத்துவா - இவை ஒரே நேர்க்கோட்டிலேயே தங்கள் பயணத்தை மேற்கொண்டிருக்கின்றன!

(குறிப்பு: மேலும் தகவல்களுக்கு: முஹம்மது சித்திக் குரேஷி எழுதிய 'ZIONIAM AND RACISM").

(நிறைவு)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஆட்சி அதிகாரம் : அம்பேத்கர் பார்வை என்ன?

**கொளத்தூர் மணி**

நாம் புரட்சியாளர் அம்பேத்கரை, அவரின் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அவரது ‘ஜாதி ஒழிப்பு’ நூல். லாகூர் மாநாட்டில் அவர் ஆற்ற இருந்த உரையை நூலாக வெளியிட்டார். நூல் வெளி வந்த இரண்டாம் மாதத்தில், அம்பேத்கரின் அனுமதியோடு தமிழில் பெரியார் வெளியிட்டார். அந்த நூல் தாங்கியிருந்த சிந்தனையைதான் பெரியாரும் கொண்டிருந்தார். அரசியல் நிலைபாடுகளில் இருவருக்கும் சிறு சிறு மாற்றங்கள் இருந்திருக்கலாம். அம்பேத்கர் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினார். பெரியார் தனித் தமிழ்நாடு பேசினார். இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். பெரியார் இந்தி கூடாது என்று சொன்னார். அரசியல் நிலைகளில் அவரவர்களுக்கு இருந்த கருத்தின் அடிப்படையில் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்பை பிற சாதியினர் வாழும் பகுதிகளில் நிறுவ வேண்டும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிக் கிணறு வெட்ட காங்கிரஸ் நிதி அனுப்பியது. காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் வந்த நாற்பத்தி எட்டாயிரம் ரூபாயை திருப்பி அனுப்பினார். பொதுக் கிணற்றில் நீர் எடுக்க போராட வேண்டுமே தவிர தனிக் கிணறு கூடாது என்பது பெரியார் கருத்து. இன்னொரு பக்கம் அம்பேத்கர் தனிக் குடியிருப்பு வேண்டும் என போராட்டம் நடத்தினார். இப்படி பார்த்தால் அவர்களின் கோரிக்கைகளில் வேறுபாடுகள் போல தெரியும். ஆனால் அடி நீரோட்டமாய் இருவர் கருத்தும் சாதி ஒழிப்பே சமூக விடுதலை என்பதாகத் தான் இருந்தது.



1935 இல் மராட்டியத்தில், பம்பாய் மாகாணத்தில் சட்டமன்றத்திற்கு உறுப் பினராக நியமிக்கிறார்கள். நியமனம் பெற்று அவர் ஆற்றிய முதல் உரையிலேயே அங்கிருந்த நில உடமை யாளர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து பேசுகிறார். ஆங்கில அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகங்கள் பற்றி பேசுகிறார். அவர் ஒரு நியமன உறுப்பினராக இருந்தும், நியமித்தவர்களையே விமர்சித்து பேசுகிறார். அவர் பதவி முக்கியம் எனக் கருதவில்லை. அவர் சமஸ்கிருதம் படித்தார், வேதங்களை படித்தார், புராணங்களை படித்தார், சாஸ்திரங்களை படித்தார். எதற்கு பயன்படுத்தினார்? இந்திய சமுதாயத்தில் சாதிய பிடியில் இருந்து மக்களை எப்படி காப்பாற்றுவது என்று அறிவதற்குப் படித்தார். மனுதர்மத்தைப் பற்றி அவர் செய்த ஆய்வு, யாருடனும் ஒப்பிட முடியாத அளவிற்குரிய ஆய்வாகும். மனுதர்ம சாஸ்திரத்திற்கு முன்னால் இருந்த காலத்தில் அனைவருக்கும் இருந்த உரிமைகளை எடுத்துக் காட்டினார். அவர் ஒவ்வொரு நாட்டின் சரித்திரங்களை படித்து, அடிமைத் தனத்தைவிட கொடுமையானது தீண்டாமைதான் என்பதை பல அடிமைத்தனத்தோடு ஒப்பிட்டு எழுதினார்.

**நான் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அவர்தான். அவர் எழுதிய சட்டத்தைப் பற்றி. நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பலவற்றை எழுதினேன் என்று சொன்னார். பேனாவை பிடித்தது மட்டும்தான் என் கை, அதை ஆட்டுவித்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் சொன்னார்.**

அம்பேத்கர், வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக (இன்றைய மத்திய அமைச்சருக்கு இணையான பதவி) தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி ஏற்பதற்கு முன்னால் நாக்பூரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். கற்பி போராடு ஒன்று சேர் என்ற வாசகங்களை பேசியது அந்த மாநாட்டில்தான். பெண்கள் உரிமைக்காக தனியாக ஒரு மாநாடு, சமத்துவ தொண்டர் படை என்ற ஒரு மாநாடு, காந்தியோடு முரண்பட்டிருந்த அம்பேத்கர், இம்சைக்கு எதிரான சொல்தான் அகிம்சை. சாதியவாதிகளால் தாக்கப்பட்டால் திருப்பி தாக்கலாம் என்பதை தனது தொண்டர் களுக்கு சொன்னார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என விளம்பரம் செய்து, அம்பேத்கரை தாழ்த்தப்பட்ட வர்களின் தலைவராக சுருக்கிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்றோ அரசியல் சட்டத்தை எழுதியவர் என்றோ சொல்வது அவருக்கு பெருமை அல்ல. அவர் சொன்னார்... இந்து சமுதாயத்திற்கு வேதங்கள் தேவைபட்டது தாழ்த்தப் பட்ட வியாசனை வைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு இதிகாசம் தேவைபட்டது. தாழ்த்தப்பட்ட வால்மீகியை வைத்து எழுதிக் கொண்டார்கள். இவர்களுக்கு அரசியல் சட்டம் தேவைப்பட்டது. என்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படித்தான் சொன்னார். இவர்கள் எங்கு போனாலும் தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்தித்தான் தங்கள் உயர்வை நிறுவிக் கொண்டார்கள் என்று சொன்னார். நான் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அவர்தான். அவர் எழுதிய சட்டத்தைப் பற்றி. நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பலவற்றை எழுதினேன் என்று சொன்னார். பேனாவை பிடித்தது மட்டும்தான் என் கை, அதை ஆட்டுவித்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் சொன்னார். ஆந்திர பிரிவினை விவாதத்தின்போது பேசியவர்கள், ‘நீங்கள் தானே சட்டத்தை எழுதினீர்கள்’ என்று கேட்டனர். அவா சொன்னார்... ‘ஆம் நான் தான் எழுதினேன். அதை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருக்கப் போகிறேன்’ என்று. அரசியல் வரைவு குழுவிற்குள் நுழைந்தபோது, என்னுடைய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தவிர, எனக்கு வேறு எந்த ஆசையும் இருக்கவில்லை என்று சொன்னார்.

காங்கிரசை எப்போதும் எதிர்த்து வந்த அம்பேத்கர், காந்தியும், காங்கிரசும் தீண்டதகாதவர்களுக்கு செய்தது என்ன? என்று ஒரு புத்தகமாக எழுதி, இந்த மக்களுக்கு காந்தியும், காங்கிரசும் செய்த துரோகங்களை பட்டியலிடுகிறார். பல வீடுகளின் முன்னால் நாய்கள் இருக்கிறது எச்சரிக்கை என்ற பொருளில் “பிவேர் ஆப் டாக்ஸ்” என்று எழுதியிருப்பதைப்போல், அந்த புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற்கு முந்தைய அத்தியாயத்தில், “பிவேர் ஆப் காந்தி” என்ற தலைப்பை அம்பேத்கர் எழுதியுள்ளார். தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்காக பல முயற்சிகள் எடுத்ததில் ஒன்றாகத்தான், 1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு சென்று பல செய்திகளை எடுத்து வைத்தார். காங்கிரஸ் அப்போது கலந்து கொள்ளவில்லை. 1931 ஆம் ஆண்டு தான் காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின்படி வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்கிறார். (உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி, இனி போராட்டம் நடத்த மாட்டோம் என்றும், வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன் என்றும் போடப்பட்டதுதான் “காந்தி-இர்வின் ஒப்பந்தம்”)

1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன்னால் காந்தியை சந்தித்து பல விவாதங்களை செய்து, நீங்கள் ஏன் எப்போதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகமே செய்கிறீர்கள் என்று கேட்டு விட்டுத்தான் அம்பேத்கர் மாநாட்டிற்குப் போனார். அந்த மாநாட்டில் அம்பேத்கர் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதமர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை தனித்தொகுதி உண்டு என அறிவித்தார். அப்படி கூடாது என்று போராடினார் காந்தி. இசுலாமியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதியை ஏற்றுக் கொண்ட காந்தி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்குவது, இந்துக்களை பிரிக்கும் சூழ்ச்சி என்றார். அம்பேத்கர் கேட்டார்... “இது வந்து தானா இந்துக்களை பிரிக்கப் போகிறது? நீங்கள் என்ன இணைத்தா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்போதும் எங்களை அரவணைத்துக் கொண்டா இருக்கிறீர்கள்? எப்போதும் பிரிந்திருக்கிற நாங்கள், இப்போதும் பிரிந்திருந்து நாங்கள் பெறப் போகும் மேம்பாட்டை ஏன் தடுக்கிறீர்கள்?” என்று.

சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்த காந்தியை பார்த்து அம்பேத்கர் கேட்டார்..... “நீங்கள் எப்போதாவது உங்களின் உச்சபட்ச கோரிக்கையான இந்திய நாட்டின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறீர்களா? எங்கள் உரிமையை பறிப்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறீர்களே” என்று. “ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைவிட, ஒரு காந்தியின் உயிர் பெரிதல்ல, உறுதியாக நில்லுங்கள்” என்று. அப்போது வெளிநாட்டில் இருந்த பெரியார் அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தார். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் உரிமைகளை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தொடர்ச்சியாக காந்தியின் சூதான போக்கினை எதிர்த்து நின்ற தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும்.

இந்த சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களின் உரிமையைப் பற்றி, அவர்களுக்கான மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்வதற்காக வந்ததுதான் சைமன் கமிஷன். அதை வரவேற்றவர்கள் இந்தியா முழுவதும் இரண்டே தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் தான். எல்லோரும் எதிர்த்தார்கள். பெரியார் ஆதரித்து வந்த நீதிக் கட்சியும் எதிர்த்தது. அப்போது பெரியார் எழுதினார். “சைமன் கமிஷனில் இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை என்ற காரணத்தைச் சொன்னார்கள். மிண்டோ மார்லிக், மாண்டேகு சேம்ஸ்போர்டு வந்தபோதெல்லாம் கேட்காமல், இப்போது மட்டும் ஏன் கேட்கிறாய்? ரவுலட் சட்டத்தை ரவுலட் மட்டுமா எழுதினான்? குமாரசாமி சாஸ்திரியும் சேர்ந்துதானே எழுதினான். அதனால் என்ன பலன் கிடைத்தது? அவன் வீட்ல நான்கு பேருக்கு வேலை கிடைத்தது. நல்லது வந்தா மட்டும் நீ ஏற்றுக் கொள்கிறாய். கெட்டது வந்தா வாயை மூடிக் கொள்கிறாயே. நல்ல வேளையாக இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை. நியமித்திருந்தால் பார்ப்பானை தான் நியமித்திருப்பான். அவன் எங்களுக்கு எதிராகத்தான் இருந்திருப்பான். எனவே இதை நான் வரவேற்கிறேன்” என்று எழுதினார்.

இரண்டாம் உலகப் போரில், இந்தியப் படையை ஆங்கில அரசு போரில் ஈடுபடுத்தியது. இதனால் இந்தியர்களுக்கு என்ன லாபம் என்று கண்டித்து காந்தி அறிக்கை விட்டார். எப்போதும் காந்தியை எதிர்க்கும் அம்பேத்கர் அப்போது வரவேற்றார். காந்தியார் கேட்ட கேள்வியில் நியாயம் இருக்கிறது வரவேற்கிறேன், அதே சமயத்தில் காந்தியாரிடம் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. இந்திய விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டவர்களை ஈடுபடுத்துகிறீர்களே! அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது என்று கேட்டார். அதைத்தான் இன்றும் சொல்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 08, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran